1979 மார்ச்சு 6]

பலனடைகின்றன. அதன் மூலமாக 1,793 ஏக்கர் 20 சென்ட் நிலங்கள் பலனடைகின்றன. இதிலே ஆக்கிரமிப்பு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆக்கிரமிப்புகள் இருக்கக்கூடாது என்பது இந்த அரசின் நோக்கம். இதைத்தான் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து இந்த அரசு எதிர்பார்க்கிறது. ஆயினும், ஆக்கிரமிப்பு செய்திருப்பார்களானால், தயவு செய்து வெளியேற வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு கோ. ரகோத்தமன்: தலைவர் அவர்களே, இந்த வரதானூர் ஏரியின் உட்புறத்திலே சுமார் 100, 150 பம்பு செட்டுகள் வைத்து ஆக்கிரமிப்பு செய்து, பயிர் செய்து கொண்டு வருகிறார்கள். இந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பம்புசெட்டு வைத்து Unauthorised pumping of water from the canal செய்யக்கூடாது என்று ஏற்கனவே விவசாயப் பெருங்குடிமக்களுக்கு நாம் சொல்லியிருக்கிறோம். இப்படி அன் ஆதரைஸ்டாக தண்ணீர் எடுப்பதன் மூலமாக கீழே இருக்கக் கூடிய கடைகோடியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவக் குழு.

*வினா எண் 255—திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Medical Commission ஒன்று நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: ஆம். இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்த மெடிக்கல் கமிஷன் எப்போது நியமிக்கப்படும் என்ற விவரத்தையும், இந்த மெடிக்கல் கமிஷனிலே உறுப்பினர்கள் நியமிக்கப்படும்போது, பொதுமக்களின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர் ஒருவரையும் இந்தக் கமிஷனிலே நியமித்தால் நலமாக இருக்குமாகையால், அப்படி நியமிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உதவி மருத்துவ அறுவை சங்கத்தினர் இப்படி ஒரு மருத்துவ ஆணைக்குழு நியமிக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானத்தை அனுப்பியிருக்கிறார்கள். அப்படி அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் மருத்துவக் கல்வித் துறை, மருத்துவப் பணியாற்றும் குடும்பநலத் துறை, மருத்துவ பொது சுகாதாரத் துறை, மற்றும் தடுப்பு மருததுவத் துறை ஆகிய துறைகளில் இப்போது பணியில் இருப்பவர்கள் அல்லது ஒய்வுபெற்ற மூத்த அதிகாரிகள் இந்தக் குழுவிலே இருக்கவேண்டுமென்று அவர்களே இந்த விருப்பத்தைத் தெரிவித்து, தங்களுடைய சங்கத்தைச் சேர்ந்த ஒருவரையும் இந்தக் குழுவில் உறுப்பினராகவும் போடவேண்டும் என்றும், அதன் மூலமாக ஆய்வு செய்து, இந்த மருத்துவக் குழுவைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றும், இதனால் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எனவே, இதைப் பற்றி ஆய்வு செய்து அனுப்ப வேண்டுமென்று அந்தந்தத் துறையைச் சார்ந்த இயக்குநர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. வந்ததற்குப் பிறகு, இன்னும் யார் யாரை இந்தக் குழுவிலே சேர்க்கலாம் என்பதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

செவிலியர் பணி முறை.

*வினா எண் 256— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா மருத்துவ மனைகளிலும் மூன்று ஷிப்டு முறை (Three shift system) வேண்டும் என்று State Nurses Association அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) பயிற்சி பெற்ற செவிலியர்கள் போதிய அளவில் இல்லாமையாலும் இக்கோரிக்கை நிறைவேற்றப்பட மிகுந்த அளவில் பொருள் செலவு ஏற்படும் என்பதாலும் இக்கோரிக்கை தற்போது ஏற்கப்பட இயலாது என்று செவிலியர் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது.